ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. சுக்கில ஹூ பங்குனிமீ பகுதி ங.
Vol 7. March & April 1930. No. 3.

நம்பிள்ளை வைபவம்.

(15-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஈடு முதலியவற்றின் அவதாரக் கிரமம்.

அப்பொழுது, நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டருக்கு நம்பிள்ளை திருவாய்மொழியின் செழும்பொருளை ஒருரு ப்ரஸாதித்தருளினர். பட்டரும் அதனை "செவிவாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்து" என்றவாறு ஒன்றுந் தப்பாது தம் மனத்தில் தேக்கிக்கொண்டு பதறாது முறைப்படுத்தி இரவு தோறும் அன்றன்று கேட்ட அர்த்தங்களையெல்லாம் ஒழுங்குபெற எழுதிவருவதாயினர். இங்ஙனமாகக் கிரந்தமும் ஒருவாறு முடிவுற்றது. பின்பு பட்டர்தாமெழுதிய கிரந்தங்களைப் பிள்ளை திருமுன்பு கொண்டுபோய் வைத்துத் தெண்டனிட்டு நின்றனர். அது கண்ட பிள்ளை இதுவென்னென்று கேட்டருள, பட்டரும் தேவரீர் இம்முறை திருவாய்மொழிக்குப் பொருள்கூறியருளிய கட்டளை இது என்று பணிவுடன் பகர்ந்தனர்.

பிள்ளையும் அதுகேட்டு ஆமோவென்று கிரந்தங்களை அவிழ்த்துப பார்த்த பொழுது ஒன்றேகால்லக்ஷம் க்ரந்தமாய் மஹாபாரத அளவினதாயிருந்தது. அதுகண்டு பிள்ளை, திருவுள்ளத்தில் மிகவும் வருத்தமுற்றுப் பட்டரை நோக்கி "வாரீர் பட்டரே! இதற்கு நம்

முடைய அனுமதியும் பெற்றீரில்லை; நாட்டுக்குப் பாட்டுரையாம்படி நீர் நினைத்தபடியே இவ்வாறு திருவாய்மொழிப்பொருளை வெளியிடுவதானீர்; இது தகுமோ"வென்று வினவியருளினர்.

பட்டர் அதுகேட்டு 'ஸ்வாமீ! திருவாய்மொழியின் பொருட்டாகத் தேவரீர் திருவாய்மொழிந்தவற்றையே யெழுதினேன்; அஃதன்றிக் கால் கொம்பு சுழியேனும் கூட்டி யெழுதினதுண்டாயிற் பார்த்தருளவேணும், என்று விண்ணப்பித்தனர். பிள்ளை அது கேட்டுப் பட்டரை நோக்கி, கேளீர் பட்டரே! திருவாய்மொழியைக்குறித்து நாம் வாயாற் சொன்னவற்றையே எழுதினீர்; அன்றி நம்முடைய கருத்திலுள்ள பொருளையும் எழுதப்பெற்றீரோ வென்று வெறுத்தருளிச்செய்து பின்னும் அவரை நோக்கி, உடையவர் காலத்திலே திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணத்தினளவாலே ஆறாயிரமாக ஒருரையிடுகைக்கு உடையவரிடம் அனுமதிபெறும்பொருட்டுப் பட்ட எத்தனத்திற்கு மட்டு முடிவில்லை; அங்ஙனமிருக்க, நம்முடைய காலத்திலே நம்மையுங் கேளாமல் நூற்றிருபத்தையாயிரங் கிரந்தமாக இப்படிப்பரக்கவெழுதினீர்; இதனால் திருவாய்மொழி ஒரு சிஷ்யாசார்யக்ரமமின்றி முறைதவறி அஸம்ப்ரதாயமாயொழியும் என்றருளிச்செய்து அவர் கையினின்றும் கிரந்தங்களை வாங்கிக்கொண்டு நீரைச் சொரிந்து கரையானுக்கிட்டனர். அவையும் அப்பொழுதே மண்ணுண்டுபோயின.

நம்பிள்ளையினது திருவடியடைந்துய்ந்தோர்களில் பெரியவாச்சான்பிள்ளை யென்னும் பெரியார் தலைசிறந்த பெருமையுடையார். இவரவதரித்தவிடம் சோழ நாட்டிலுள்ள சங்கநல்லூர். குலம் பூர்வசிகை வைஷ்ணவகுலம். குடி சங்கநல்லூர். திருத்தந்தையார் யாமுன தேசிகர். அன்னையார்-நாச்சியாரம்மாள்.* ஆச்சான்பிள்ளை, அபயப்ரத

---

*இவர் குமாரரான நாயனாராச்சான் பிள்ளையும் நாலூராச்சான் பிள்ளையும் உண்டாகையால் அவர்களின் இவர்க்கு வேறுபாடு தோன்றப் பெரியவாச்சான் பிள்ளையென்று வழங்குவர்.

ராஜர், ஸ்ரீமத் †கிருஷ்ணர் முதலியன இவர்க்கு வழங்கும் திருநாமங்கள்.

பின்பு நம்பிள்ளை தமக்குகந்த சிஷ்யரும் தம்பக்கல் எல்லா வர்த்தங்களையும் அலகலகாகக் கற்றவருமாகிய பெரியவாச்சான் பிள்ளையைத் திருவாய்மொழிக்கு ஒருரை செய்வீரென்று பணித் தருளினர். அவ்வாறே பெரியவாச்சான் பிள்ளையும் ஸ்ரீராமா யணத்தினளவாலே இருபத்துநாலாயிரங்கிரந்தமாக ஒருரை செய் தருளினர்.

பின்னையும் பெரியவாச்சான்பிள்ளை பெரியாழ்வார் முதலிய மற்றையாழ்வார்களருளிச் செயல்களனைத்திற்குஞ் சிறந்தோருரை செய்தருளினர். ராமாயணம் பாரதமுதலியவற்றின் தனி சுலோகங் கட்கும் சிறக்கவுரைசெய்தனர். ஆளவந்தார் ஸ்தோத்திரம் போன்ற பல நூல்கட்கும் இவருரையுண்டு. சுருங்கக்கூறில் இவருரையிடாத ஸம்ப்ரதாய நூல் இல்லையென்றே கூறலாம். பின்வந்த ஆசிரிய ரொருவர் தாம் சில நூல்கட்கு உரைகாண வெண்ணிப் பல நூல் களையும் ஆராய்ந்தபொழுது எல்லாம் பெரியவாச்சான்பிள்ளை கை வைத்தவைகளாய் இருக்கக்கண்டு 'சோழியன் சுவைத்த சக்கை' என்றுகூறி அம்முயற்சி தவிர்ந்தனர் என்பர். இவர் செய்த ரஹஸ்ய கிரந்தங்களும் பலவுண்டு.

> "நம்பிள்ளை தம்முடையநல்லருளாலேவியிடப்
> பின்பெரியவாச்சான்பிள்ளையதனால்—அன்பா
> லருபத்திமாறன்மறைப்பொருளைச்சொன்னது
> இருபத்துநாலாயிரம்."

† க்ருஷ்ணர் என்ற திருநாமம் பெரியவாச்சான் பிள்ளைக்கும், வடக் குத்திருவீதிப்பிள்ளைக்கும் வழங்கும். அதுபற்றி இவர்களை கிருஷ்ணத்வய மென்றும் இருகண்ணரென்றும் கூறுவர். "இருகண்ணர்க்கன்புடைய நம் பிள்ளை" என்றதுங் காண்க. நம்பிள்ளைக்கு இவர் இருவரும் இருகண் போன்றவர்கள் என்றுமாம்.

"பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரியவியாக்கியைகள் செய்வால்—அரிய
அருளிச்செயற்பொருளையாரியர்கட்கிப்போது
அருளிச்செயலாய்த்தறிந்து."

என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் பாராட்டிக் கூறியருள்வதுங் காண்க.

பின்னையும் நம்பிள்ளை திருவாய்மொழிக்கு ஒருரு அர்த்தம் அருளிச்செய்கிற கட்டளையை அவருக்கு அந்தரங்க சிஷ்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளை பகலெல்லாம் கேட்டுத்தாரணைபண்ணி இரவிலே யெழுதி முடித்தவாறே அதனைப் பிள்ளை சந்நிதியிலே கொண்டுபோய் வைத்தனர். பிள்ளையும் இஃதென்னென்று கேட்டருள அவரும் தேவரீர் இம்முறை திருவாய்மொழிக்குப் பொருள் கூறியருளிய கட்டளையென்று விண்ணப்பித்தனர். பிள்ளையும் திருமுறையை (ஏடு) அவிழ்த்துப் பார்த்தருள, குன்றக்கூறலும் மிகைபடக்கூறலுமின்றிச் சுருங்கச் சொல்லலும் விளங்கவைத்தலுமாய் ஆறுயிரப்படியும் நூற்றிருபத்தையாயிரமும்போல் மிகச்சுருங்கலும் மிக விரிதலுமின்றி ஆனைக்கோலம் செய்தாற்போல மிகவும் அழகாய் §சுருதப் பிரகாசிகையின் அளவாக முப்பத்தாறுயிரமாயிருந்தமையாலே, பிள்ளை அதனைக்கண்டு மிகவும் களிப்புற்று வடக்குத் திருவீதிப் பிள்ளையைப்பார்த்து 'நன்றாக எழுதினீர்; ஆனாலும் நம் முடைய அநுமதியின்றியே யெழுதினீர்; ஆகையால் க்ரந்தங்களைத் தாரும்' என்று அவர் கையினின்றும் வாங்கிக்கட்டி உள்ளே வைத்தருளினர்.

"தெள்ளியதாகம்பிள்ளைசெப்புநெறிதன்னை
வள்ளல்வடக்குத்திருவீதிப்—பிள்ளையிந்த
நாடறியமாறன்மறைப்பொருளைநன்குரைத்தது
ஈடுமுப்பத்தாறுயிரம்" (உபதேசரத்னமாலை.)

---

§சுருதப் பிரகாசிகை ஈட்டிற்குப்பின்னே அவதரித்ததாயினும் இவ்வாறு பின்புள்ள ஆசாரியர்கள் வழங்கி வருகின்றனரென்பர்.

ஈடுவந்த வரலாறு.

இங்ஙனம் நம்பிள்ளை ஈட்டை வாங்கி உள்ளே வைத்துவிட்டமைகண்ட *ஈயுண்ணிமாதவப் பெருமாள், ஈட்டைப்பெற்றுச் சேவித்து மகிழ்க்கருதி நெடுநாள் நம்பெருமாளை வலஞ்செய்து வணங்கி வழிபட்டு வேண்டிக்கொண்டனர். ஒருநாள் நம்பெருமாளும் அர்ச்சகர் வாயிலாய் ஈயுண்ணிமாதவப்பெருமாளென்கிற சிறியாழ்வானப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி 'ஏன்காணும் நம்மை வெகுவாய் வழிபடுகின்றீர்' என்று கேட்டருளினர். அதுகேட்ட ஈயுண்ணிமாதவப்பெருமாளும் 'எம்பெருமானே! நம்பிள்ளை திருக்கையிலே திருவாய்மொழிக்கு ஈடுமுப்பத்தாறாயிரமென்று ஒரு வியாக்யான க்ரந்தம் உள்ளது; அதனை அடியேனுக்கு அவர் இரங்கி அளித்தருளும்படி பணித்தருளவேணும்' என்று வேண்டிநின்றனர். பெருமாளும் 'அப்படியேசெய்கிறோம்' என்று திருவுள்ளம் பற்றியிருக்குங்கால் நம்பிள்ளையும் முதலிகளுமாகப் பெருமாளைத் திருவடிதொழச் சென்றனர். அப்பொழுது பெருமாள் பிள்ளைக்கு தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம்சடகோபனும் ப்ரஸாதித்தருளி அர்ச்சகர் வாயிலாய் நம்பிள்ளையை நோக்கி 'நீர் ஈடு முப்பத்தாறாயிரத்தை ஈயுண்ணிச்சிறியாழ்வானப்பிள்ளைக்குக் கொடும்' என்று திருவுள்ளமாக, பிள்ளையும் பேரருள் என்று பெருமாள் பணியைத் தலையிற்கொண்டு தம் திருமாளிகைக் கெழுந்தருளித் தமக்குகந்த சீடரான ஈயுண்ணிமாதவரென்கிற சிறியாழ்வானப்பிள்ளைக்குத் தம்பொருளைத் தாம் வேண்டினவர்க்குக் கொடுப்பார் போன்று, 'இதனை ஒருவர்க்கும் வெளியிடாமே அநுசந்தித்துக்கொண்டு போரும்' என்று ஈடு முப்பத்தாறாயிரமும் கொடுத்து அவரை இப்பேறு பெறும்படி செய்து பெரிதும் வாழ்வித்தருளினர்.

பின்பு மேலெல்லார்க்கும் உதவும்படி தம்மிடத்திலே சேமித்து வைக்கப்பட்ட நிதியாகிய ஈடு முப்பத்தாறாயிரத்தையும்

---

*'சிறியாழ்வானப்பிள்ளை' என்பது இவர் திருநாமம். ஈயுண்ணியென்பது குடிப்பெயர். பின்பு நம்பிள்ளை தமது சீடரான இவர்க்கு, தமதாசாரியரான நஞ்சீயர் திருநாமமாகிய மாதவன் என்ற நாமத்தைச் சூட்டினார். அதனால் இவர் ஈயுண்ணி மாதவர் என்றும் வழங்கப்பெறுவர். "சீமாதவனடிக்கன்பு செய்யும் தஞ்சத்தொருவன்" என்று நம்பிள்ளையைக் கூறியதுங்காண்க.

§சஞ்சிதங்காட்டுவாரைப்போல் ஈயுண்ணி மாதவனர் தம் குமாரரான பத்மநாபப்பெருமாளுக்கு ஈந்தருளி, தம் கையிலே திருவாராதனமாயிருந்த ஸ்ரீகோசத்தையும் காட்டிக்கொடுத்தருளினர்.

இவர் இருவர்காலத்திலும் ஓராண்வழியாய் உபதேசித்துக் கொண்டு ஸ்ரீ கோசத்தையும் வெளிக்காட்டாமல் கோயிலாழ்வாரிலே திருவாராதனமாய் வைத்துப்பேணிக்கொண்டுவர, நம்பிள்ளை ஆணையின்படியே ஈடு நடைபெற்று வந்தது. இப்படி நிதிபோற் பேணிக்கொண்டு போந்தது †பெருமாள்கோவிலில் பட்டர்கள் திருவீதியில் திருமாளிகையில் என்க.

பின்பு பத்மநாபப்பெருமாள், தமது திருவடிகளை அடைந்து "குருக்களுக்கனுகூலராய்" என்றவாறு வந்தனை வழிபாடு முதலியவைகளால் தம்மை மிகவும் உகக்கச்செய்த ¶நாலூர்ப்பிள்ளைக்கு ஓராண்வழியாய் முன் நடந்தவாறே யுபதேசிக்கக் கருதினர். அவ்வாறு கருதியவர் அவரைப் பேரருளாளர் திருமுன்பு இட்டுக் கொண்டுபோய்ப் பிள்ளையின் நியமனம் தவறாமைப்பொருட்டு பிரமாண மூலம் சூளுரவுகொண்டுசொல்வீர் என்று ஸ்ரீசடகோபனை அர்ச்சகரைக்கொண்டுஇவர் திருமுடியிலே ஊன்றுவித்தனர். நாலூர்ப்பிள்ளையும் அதனை வெளியிடாமைக்கு ஊன்றுகிற குறிப்பைத் தாமும் குறிப்பாலறிந்து பெருமாள் திருமுகமண்டலத்தைப் பார்த்துத் தந்திருமுடியிலே வைத்த சடகோபனை 'அருளாளர் திருவடியூன்றினவர்' என்னும்படி தம் திருக்கைகளாலூன்றிக் குறிப்பித்தனர். அக்குறிப்பை ஸர்வக்ஞரான பெருமாள் அறிந்தருளி 'இதனை நீசொல்லார்க்கும் வெளியிடும்' என்று அர்ச்சகர் வாயிலாய் ஆணையிட்டருளினர். அதுகேட்ட பத்மநாபரும் தாமெண்ணினவாறாகாமையாலே 'திருவுள்ளமானபடி' என்று பின்பு உகப்புடனே ஈடு முப்பத்தாறாயிரத்தையும் அவர்க்கு ஈந்தருளினர்.

---

§சஞ்சிதம்—சேகரித்துவைக்கப்பட்ட பொருள்.

†பெருமாள்கோவில்—காஞ்சீபுரம்.

¶நாலூர்ப்பிள்ளை—இவரைக்கோலேசர் என்றும், கோலவராஹப் பெருமாள் என்றும்,ராமாநுஜார்யதாஸரென்றுங் கூறுவர்.

நாலூர்ப்பிள்ளை "யாம்பெற்ற வின்பம் பெறுக விவ்வையகம்" என்றபடி இதனை யுலகெலாமறிந்தனுபவித்துய்யுமாறு எல்லார்க்கும் வெளியிடவேணுமென்று பிறர்பேற்றைத் தம்பேறுகக் கருதிப் பேரருளாளப்பெருமாளை வலஞ்செய்து வணங்கி வழிபட்டு வந்தனர். அவரும் வரதரானமையால் அவ்வாறே தலைக்கட்டியருளினர். இப்படி வகுளபூஷண வாக்கமிர்த மர்த்திரத்திற்கன்றி வசனபூஷணத்திற்கும் ப்ரவர்த்தகர் பேரருளாளப் பெருமாள் என்பர் பெரியோர். நாலூர்ப்பிள்ளை யிப்படி ஈட்டை மிகவும் விரும்பிப்பெற்றமையால் பின்புள்ள ஆசார்யர்களெல்லாம் அவரை வெகுவாய்க் கொண்டாடினார்கள். இப்படி இவர் திருவாய்மொழிக்குப் பிரவர்த்தகரானதுமன்றிப் பெரியாழ்வார் திருமொழி, பெரியதிருமொழி முதலியவற்றுக்கும் உரை வகுத்தனர் என்பர். பின்பு நாலூர்ப்பிள்ளை சகல கலைகளும் நிரம்பப் பெற்றவரும் குணசாலியுமான தம் நல்ல மகனாராகிய *நாலூராச்சான் பிள்ளைக்கு இதனை நடத்திக்கொண்டு போரும் என்று ஈட்டையளித்தருளினர்.

பின்பு நாலூராச்சான்பிள்ளை திருமலையாழ்வாரென்கிற திருவாய்மொழிப்பிள்ளைக்கும் திருநாராயணபுரத்தில் ஆயி பிள்ளை முதலாயினோர்க்கும் † ஈட்டையருளிச்செய்தனர். திருவாய்மொழிப் பிள்ளைக்கு நாலூராச்சான் பிள்ளையே மற்றை மூவாயிரத்திற்கும் பொருளருளிச்செய்தனர் என்றுங்கூறுவர். இத்திருவாய்மொழிப் பிள்ளையாகிய திருமலையினின்றும் இழிந்த திருவாய்மொழிப்பொருளாகிய ஈடுமுதலியவையும், மற்றைத்திவ்யப்ரபந்தங்களின் அர்த்தங்களும், மற்றுமுள்ள ரஹஸ்யங்களுமாகிய அமுதமெல்லாம் திருவாய்மொழிப் பெருக்கரென்று பிரஸித்தரான ஸ்ரீமணவாளமாமுனிகளாகிய ஏரியிலே தேங்கி, பின்பு அவர் திருவடிகளையடைந்த ஆசிரி

---

* இவர்க்குத் தேப்பெருமாள், தேவராஜர் என்ற திருநாமங்கள் உண்டு. ஈட்டையெல்லார்க்கும் வெளியிடவேண்டுமென்ற தங்கருத்தைத் தேப்பெருமாள் முடித்து வைத்தமையால் அந்நன்றியோன்ற நாலூர்ப்பிள்ளை தம்மகனுக்குத் தேப்பெருமாளென்ற திருநாமஞ் சாத்தினரென்பர்.

† இதுவரை ஓராண்வழியாய் வந்த நியமம் இங்குச் சிறிது தளர்த்தப்பட்டது. இதுபற்றியே "மேலோர்க்கீந்தாரிவரே" யென்று பன்மையாலும், "மிக்கு" என்றுங் கூறியருளியதும்.

யர்களாகிப் பலமடைகள் வழியாலுஞ்சென்று உலகெங்கும் பாய்ந்து பத்திப்பைங்கூழ் நன்கிவிளையுமாறு நடைபெற்றுவருவது உலக மறிந்தது.

"சீரார்வடக்குத்திருவீதிப்பிள்ளையெழு
தோரார்தமிழ்வேதத்தீடுதனைத்—தாருமென
வாங்கிமுன்நம்பிள்ளையீயுண்ணிமாதவர்க்குத்
தாங்கொடுத்தார்பின்னதனைத்தான்."

"ஆங்கவர்பாற்பெற்றசிறியாழ்வானப்பிள்ளை
தாங்கொடுத்தார்தம்மகனார்தங்கையிற்—பாங்குடனே
நாலூர்ப்பிள்ளைக்கவர்தாம்நல்லமகனார்க்கவர்தாம்
மேலோர்க்கீந்தாரவரேமிக்கு."

என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் கூறியருள்வதுங் காண்க.

பின்பு பெரியவாச்சான்பிள்ளையினது சிடர்களில் ஒருவரான வாதிகேசரிஅழகியமணவாள ஜீயர் திருவாய்மொழியின் வ்யாக்யானங்கள் பலவற்றையுமாராய்ந்து அவற்றின் சாரங்களையெல்லாம் திரட்டிச் சுருக்கி, பின்புள்ளாரும் கற்றுத்தேர்ந்து பிரஸங்கித்தற்குத் துணையாம்படி தம்முடைய பேரறிவினால் திருவாய்மொழிக்குப் பாகவதத்தின் அளவால் பன்னீராயிரமாக ஒருரையிட்டருளினர்.

"அன்போடழகியமணவாளச்சீயர்
பின்போருங்கற்றறிந்துபேசுகைக்கா—தம்பெரிய
போதமுடன்மாறன்மறையின்பொருளுரைத்தது
ஏதமில்பன்னீராயிரம்.

என்று பெரியஜீயர் அருளிச்செய்ததுங்காண்க. ஆற்றிலொழுகிப் போன ஒன்பதினாயிரப்படியை நம்பிள்ளை தாம் நஞ்சீயர் சந்நிதியிற் கேட்டவாறே மீட்டு மெழுதியளித்த விஷயம் முன்பே கூறப்பட்டது.

ஆகவே ஆறாயிரமொழிந்த திவ்யப்ரபந்தங்களின் வ்யாக்யானங்கள் அனைத்தும மற்றும் ரஹஸ்யங்கள் பலவும் வெளிவந்தமைக்கு நம்பிள்ளையே காரணபூதரென்று கூறுவது சிறிதும் மிகையாகாது பட்டருக்குப் பின்வந்த ஆசார்யர்களிற் சிரோபூஷணமாய்த் திகழ்ந்தவர் நம்பிள்ளையே. இதுபற்றியே இவரை ஆழ்வாரவதாரமென்று கூறுவதாயினர்.

"நம்பெருமாள்நம்மாழ்வார்நஞ்சீயர்நம்பிள்ளை."

என்று வரிசைப்படுத்தி அருளிச்செய்ததுங்காண்க.

"இவர் தோற்றியிறே திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களுக்கெல்லாம் வ்யாக்யாநமுண்டாயிற்று. 'இவர் தாம் ஆழ்வாரவதாரமென்னுமது தோற்றக் கார்த்திகையிற் கார்த்திகை திருநக்ஷத்திரத்தின்நாள் கலியன் திருமங்கைஆழ்வார் திருவீதியெழுந்தருளும்போது, திருக்கலிகன்றி தாஸரான இவர் திருமாளிகைவாசலிலே திருக்காவணமிட்டலங்கரிக்க அங்கே யெழுந்தருளித் திருப்பணியார வகைகளு மமுது செய்தருளி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பிரஸாதித்து அவரை மிகவும் உபலாளித்து அவ்வருகே யெழுந்தருளுவர்' என்று பெரியோர்கள் அருளிச்செய்வர்கள்; ஆகையாலிறே 'நம்மாழ்வார்' என்னுமோபாதி நம்பிள்ளையென்று போருகிறது. அவரை ப்ரதமாசாரியர் என்னுமோபாதி இவரை லோகாசாரியர் என்றும், அவரை "நாவீறுடையபிரான்" என்னுமோபாதி இவரை "வீறுடையார்" என்றும் போருகிறது. 'ஆழ்வார் தம்முடைய வவதாரம்போல ஓரவதாரவிசேஷமாய்ப் பெருமாளுக்குப் ப்ராணபூதரான நம்பிள்ளை' என்றிறே ஞானதிகையான தோழப்பர் தேவிகளுமருளிச்செய்தது. 'தஸ்மை நமஸ்ஸூக்தி மஹார்ணவாய' என்றிறே நம்பிள்ளை வைபவமிருப்பது" என்றருளிச்செய்வர் பிள்ளைலோகம் ஜீயரும்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

10-வது அத்தியாயம்.

"ஸ்ரீராதை"

பாகவதத்தின் ராஸ பஞ்சாத்யாயத்தின் மத்தியில் ராதாவென்கிற பெயர் எவ்விடத்திலும் காணப்படவில்லை. ராதை யென்னும் பெயர் வைணவ ஆசாரியர்களால் கூறப்பட்டுள்ளது. அவர்களின் வியாக்யான டிப்பணிகள் ராதையின் வரலாறு அடிக்கடி காணப்படுகிறது. மூலகிரந்தத்தில் ராதையின் பெயர் காணப்படவில்லை. அநுராகமிகுதியால் பொறுமைகொண்டு கோபிகள் யாருடையவோ அடிச்சுவட்டை நோக்கி,கிருஷ்ணனை யாரோ ஒருத்தி தங்களை விட்டகற்றித் தனிமையாக வேறிடம் அழைத்துச் சென்றுளென்று அநுமானம் செய்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் தனிமையாய் மறைந்தாரென்று மாத்திரம் கூறப்பட்டிருக்கிறதேயொழிய யாரோ ஒருத்தியைக் கூடவழைத்துக்கொண்டு மறைந்தாரென்று கூறப்படவில்லையே! ராஸ பஞ்சாத்தியாயத்தில் மட்டுமல்ல. பாகவதம் முழுதிலும் ஸ்ரீராதையின் பெயர் காணக்கிடைக்கவில்லை.

மேலும், விஷ்ணுபுராணம் ஹரிவம்சம் மஹாபாரதம் இவைகளிலும் ஸ்ரீராதையின் பெயர் காணப்படவில்லை. ஆனால் தற்காலத்தில் கிருஷ்ணனை யுபாசிக்கிறவர்களுக்கு முக்கியமான அங்கம் ராதை. ராதையின் பெயரைவிட்டு ஸ்ரீகிருஷ்ண மந்திரத்தை யுச்சரிப்பதில்லை. ராதையில்லாமல் யாதொரு கிருஷ்ண ஆலயமுமில்லை. மூர்த்தியுமில்லை. வைஷ்ணவமான அநேக கிரந்தங்களில் ஸ்ரீகிருஷ்ணனைக் காட்டிலும் ராதைக்குப் பிராதான்யம் கொடுத்திருக்கிறது. மஹாபாரதம், ஹரிவம்சம், விஷ்ணுபுராணம். இவைகளில் ராதையின் பெயர் காணப்படாமலிருக்கும்பொழுதும் ராதையென்னும்

பெயர் எவ்விடமிருந்து வந்திருக்கக்கூடும்? ராதையென்னும் பெயர் பிரம்மவைவர்த்தபுராணத்தில் முதல் முதலில் காணப்படுகிறது. இப்புராணமானது புராணங்கள் யாவையிலும் கடைசியாக வியற்றப் பெற்றதென்று மேற்றிசையோரின் கொள்கை. இப்புராணத்தின் ரசனையும் பிற்காலத்தியதையொத்தது ஆதிபிரம்மவைவர்த்த புராணம் லோபமடைந்ததென முன்பே கூறியுள்ளோம். நவீனப் பிரம்மவைவர்த்த புராணத்திலோர் புதியதான தேவதத்வம் கூறப்பட்டுளது.

இதற்குமுன் ஸ்ரீகிருஷ்ணபகவான் மஹாவிஷ்ணுவின் அவதாரமெனக் கொள்ளப்பட்டுளது. இதில் ஸ்ரீகிருஷ்ணபகவானேமஹாவிஷ்ணுவை யுண்டுபண்ணினுரென்று கூறப்பட்டிருக்கிறது. மஹாவிஷ்ணு வைகுண்டத்திலிருப்பவர். ஸ்ரீகிருஷ்ணன் கோலோகத்தில் ராஸமண்டலத்தில் விளங்குபவர். வைகுண்டம் கோலோகத்தைக்காட்டிலும் மிகவும் தாழ்ந்தது. கோலோகத்தில் கோக்களும் கோபிகளும் கோபர்களும் வசித்தனர். அவர்கள் எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் இக்கோலோகத்தின் அரசியான ராதை ஸ்ரீகிருஷ்ணனின் காதலியாயினுள். ராதைக்கு முன் ராஸமண்டலத்தையும்ராஸமண்டலத்தில் ராதையையும் ஸ்ரீகிருஷ்ண பகவான் சிருஷ்டிசெய்தார். ராதாவென்கிற பதமானது ராவென்னும் தாவென்னும் தாதுக்களிடமிருந்து உண்டாகியது.

‘‘രാസേസംഭൂയ ഗോലോകേ
സാദധാര ഹരേഃ പുരഃ।
തേനാരാധാ സമാഖ്യാതാ
പുരാവിദ്ഭി ർദ്വിജോത്തമ ॥

‘‘ராஸேஸம்பூய கோலோகே ஸாததார ஹரெ:புர:, தேநாத ஸமாக்யாதா புராவித்தி த்விஜோத்தம்’’ கோபர்கள் கோபிகளின் வாஸஸ்தானமாயும் ராதையால் ஆண்டுவரப்படுவதுமான இக்கோலோகமே பூர்வர்களால் வருணிக்கப்பெற்ற பிருந்தாவனத்தின் ஆதர்சமாயிருக்கிறது ஸ்ரீகிருஷ்ணனின்யாத்திரையில்‘‘சந்திராவலீ’’ என்றவோர்கோபி எவ்விதம் ராதையின் சக்களத்தியாக விளங்கின

ளோர் அவ்விதமாகவே கோலோகத்திலும் "விரஜா" எனப்பெயர் கொண்ட கோபி ஒருத்தி ஸ்ரீராதையின் சக்களத்தியாயிருக்கிறாள்.

மேற்கூறிய கதைகள் பின்பேற்பட்ட பிரம்மவைவர்த்த புராணத்தில் மாத்திரம் காணப்படுகிறது. இக்கதையைப்பற்றி யாதொரு வரலாறும் விஷ்ணுபுராணம், பாகவதபுராணம் இவைகளில் கொஞ்சமும் காணக்கிடைக்கவில்லை.

(தொடரும்.)

ஸ்ரீ:

கம்பர் கடவுள் வாழ்த்து.

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதற்பாட்டால் முத்தொழிலுடையவனும், எல்லாவறிவு மாற்றலுமுடையவனும், யாண்டும் நிறைந்துள்ளவனும்எவனோ அவனே தலைவனுவானென்று நிரூபிக்கலாயிற்று. இத்தகைய அறப்பெரிய பரம்பொருளை உம்மால் வாழ்த்தக்கூடுமோ என்று வினவுவாரின் கருத்தையுட்கொண்டு இறைவனது நன்னிலையை என்றுணர்த்துமாறில்லையாயினும் அவனது கல்யாணகுணக்கடலில் முழுகுதல் உய்யும் வகையாமெனக்கருதி யுரைக்கத்தொடங்கினேனென்கிறார்:—

சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணர்த்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதல் நன்றரோ.

இதன்பொருள்—ஞான குணத்தினராகிய பெரியாரால் நன்கறியப்பட்ட இறைவனது நன்னிலையைஎன்றுணர்த்துமாறில்லையாயினும் எண்ணப்பட்ட ஸத்வராஜஸ் தமோகுணங்களில் முன்னர்ச் சொல்லப்பட்ட ஸத்வகுணமுடையவனே முதற்கடவுளாவான், அவனது கல்யாணகுணக்கடலிலாடுதல் நலமாமெனக்கருதிச் சொல்லத்தொடங்கினேன்; என்பதாம்.

இனி, இதற்கு விரிவுரை வருமாறு:—

முதற்பாட்டில் குறிப்பிடப்பெற்ற அருபியாய் யாண்டும்நிறைந்துள்ள இறைவனது அந்தர்யாமியாம் நிலையினை இங்கு, "சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை" என்று அநுவதிக்கிறார். சிற்குணத்தர்-ஞான குணத்தினையுடைய பெரியார். ஈண்டு ஞானகுணத்தினையுடைய பெரியாரென்றது ஆழ்வாரை. இவர் இறைவனை அவனருளிய ஞானத்தெளிவால் நெஞ்சென்னும் உட்கண்ணால் கண்கூடாகக் காணுமாறுபோல அவனைக்கண்டு அநுபவித்து "எனக்கார் பிறாகன் ஞாலத்தே" என்று மகிழ்வெய்துவர். இங்ஙனம் மானசாநுபவத்திற்குச்சிறிதுகலக்கம் நேர்ந்தபோது லோகவிஷயங்களைச்சிறிதும் நோக்காது "சேயரிக் கண்ணமுநீர் துளும்ப வலமருகின்றன" என்றும் "கடலும் மலையும் விசும்பும் துழாய்" என்றும், சிந்தை கலங்கித் திருமாலென்றழைப்பன்" என்றும், "எங்கே காண்கேனீந்துழாயம்மானறன்னை" என்றும், உன்னைக்காண்பான் நான் அலப்பாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே கண்ணும் கண்ணீருமாய் கடல் மலை ஆகாசமுதலிய விடங்களில் தேடித் திருமாலே! என்று கூப்பிட்டு எங்கே யுன்னைக் காணப்போகிறேன் என்று அலமாப்புறுவர். இஃதன்றியும் "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்றபடி தாரக போஷக போக்கியப் பொருள்களெல்லாம் இறைவனே என்றறுதியிட்டிருப்பர். ஆக எல்லாக்காலத்திலும் பகவத்விஷயத்தில் பொழுதுபோக்கி உலகப்பற்று சிறிதுமில்லாதவராய் விளங்கினாராதலால் இவரே சிற்குணத்தாராவரென்பது தெளிவு.

தெரிவருநன்னிலை:—தெரியவருகிற நன்னிலை. இறைவன் யார்க்குமறிதற்கரியனாயிருக்கினும், அவன் தன்னியல்பைக்காட்டக் கண்ட ஆழ்வார்க்கு அறிதற்கெளியனாயிருப்பான். இதனை, "ஆம் வண்ணம் இன்னதொன்றென்று அறிவதரியவரியை, ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த" என்று ஆழ்வாரும், "செய்யன் கரியனெனத் திருமாலைத்தெரிந்துணர, வய்யங்கரியல்லமாட்டா மறை மதுரக்குருகூர், அய்யன் கவிபல்லவேற் பிறவிக்கடலாழ்வதல்லால், உய்யும் வகையொன்றும் யான்கண்டிலேனிவ்வுயிர்களுக்கே" என்று கம்பரும் உரைத்ததனால் அறியலாம்.

இனி, தெரிவருநன்னிலை என்பதற்குத் தெரிதற்கருமையான நன்னிலை என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். இறைவனுடைய தன்மை எவராலும் அறிதற்கரிது. கடல் ஒருவனால் அளவிட்டறிதற்கு அருமையுடையதாயிருந்தாலும், அது உலகிலடங்கியதாயிருப்பதால் ஓரளவினையுடையதாயிருக்கும். அதுபோல இறைவனுடைய பெருமை சேதனனால் அளவிட்டறிதற்கு அருமையாயிருந்தாலும், அது ஓரளவினையுடையதாயிருக்குமோவென்னில்; "தனக்கும் தன் தன்மையறிவரியான்" என்றபடி அவனாலும் அவன் தன்மை அறிதற்கரிதாயிருக்கும். அறிதற்கருமையாயிருக்கும் பொருளை அறிதற்கரிதென்றறிவதே அறிவாகும். அவ்வாறன்றி அப்பொருளை அறிதற்கெளிதென்றறிவது அறிவின்மையாம். இதுபற்றியே "அறிந்தன வேத அரும் பொருணூல்கள், அறிந்தனகொள்க அரும்பொருளாதல்" என்றருளியதும் காண்க. நன்னிலை-அந்தர்யாமியாய் எங்கும் நிறைந்துள்ள அவனது நிலை. "உலகம் யாவையும்" என்ற செய்யுளில் "அன்னவர்க்கே சரணங்கள்" என்றதனால் உணர்த்தப்பெற்ற அருவநிலையை ஈண்டு 'நன்னிலை' என்றார். இறைவன் சேதனாசேதனங்களில் நீக்கமற நிறைந்து விளங்குகின்றானாயினும், அச்சேதனாசேதனங்களின் தோஷங்கள் அவனைச்சார்வதில்லை. அதனால் இங்கு அந்தர்யாமியாயிருக்கும் அவனது நிலையை 'நன்னிலை' என்றார். இஃதன்றி அந்தர்யாமியாயிருக்கும் எம்பெருமான் எல்லா ஜீவர்களிடத்திலும் அநுப்ரவேசித்து நின்று அவற்றுக்கு ஆதாரமாயிருக்கின்றானாதலால் 'நன்னிலை' என்றுரைத்தாரெனினும் பொருந்தும்.

எற்கு:-உலகப்பற்றுடையவனாய் அறிவற்றவனாயிருக்கிறவெனக்கு உணர்த்தற்கரிது. அறிவிக்குமாறில்லை. அருமை ஈண்டு இன்மைப் பொருட்டு. அறிவுடையவராலும் அறிதற்கரிய பொருளை அறிவிலியாகிய என்னாலுணர்த்துமாறெங்ஙனம். அவனது நன்னிலையை உமக்குணர்த்தற்கியலாதொழியுமேல் வாளாவிருக்க வேண்டிய முறையிருக்க அம்முறைகடந்து கூறத்தொடங்குதல் சாலுமோவென்னில்; 'அவர் நற்குணக்கடலாடுதல் நன்று'மாதலால் உரைக்கத்தொடங்கினேன் என்றார். ஆழ்வாரும், "யானுமேத்தி ஏழுலகும்

முற்றுமேத்திப்பின்னையும், தானுமேத்திலும் தன்னையேத்தவேத்த எங்கெய்தும், தேனும் பாலுங் கன்னலு மமுதுமாகித் தித்திப்ப, யானுமெம்பிரானையே ஏத்தினேன் யானுய்வானே" என்றார். அஃதாவது இறைவனுடைய பெருமையையாலும், எல்லா வுலகத்தினரும, இறைவனும் துதிக்கத்தொடங்கினாலும் துதித்தற்கியலாது. அப்படியானால் அத்தகைய வஸ்துவை நீர் எப்படித் துதிக்கத் தொடங்கினீர் என்று கேட்பீரேல் நானுய்யும் பொருட்டுத் துதிக்கத்தொடங்கினேன் என்றார். அதுபோல யான் அவனுடைய குணங்களை வாழ்த்தினால் வாழலாமென்றுகருதி வாழ்த்துகின்றேனேயன்றி அவனது பெருமையின் முடிவுகண்டு வழுத்துகின்றேனல்லேன்.

இதுநிற்க, சாஸ்திரப் பிரஸித்தியை ஆராய்ந்து பார்த்தால் பிரம்மா சிருஷ்டித்தொழிலையும், விஷ்ணு காத்தற்றொழிலையும், ருத்திரன் அழித்தற்றொழிலையும் மேற்கொண்டுள்ளார்கள் என்று வெளியாகிறது. இஃதிவ்வாறிருக்க, முதற்பாட்டில் முத்தொழிலும் ஒருவனுக்கே உரியதென்று சொல்லப்பட்டுளது. ஆதலால் இவை ஒன்றுக்கொன்று விரோதமாம். இஃதல்லாமலும் மூவரும் ஒவ்வோர் காரியத்தை மேற்கொண்டுள்ளார்களாதலால் இம்மூவரும் பிரதானரோ? இம்மூவரில் ஒருவன் முக்யனோ? இம்மூவருக்கும் மேற்பட்டுள்ள ஒருவன் பிரதானனோ என்று ஐயமுண்டாகும். அதையகற்ற "முற்குணத்தவரே முதலோர்" என்றார். இம்மூவரையும் பற்றிக்கூறுகிற பிரமாணங்களை நோக்கினால் ஸத்வகுணமுடையவனே முதற்கடவுளென்று வெளியாகும். விரோதியைப் போக்கி ரக்ஷிக்குமியல்புடையவனாகிய ஸத்வகுணமுடையவனது திருநாபிக்கமலத்தில் ரஜோகுணமுடைய நான்முகன் தோன்றினானாதலால் இவன் முக்யனாகான். நடுநிலைமையின்றி ஒன்றற்கே பெருமை கற்பிக்கவேண்டுமென்று தோன்றிய ஆகமத்தினால் சொல்லப்படுகிற தமோ குணமுடைய ருத்திரனும் பிரதானனாகான்.* அத்வாரக சிருஷ்டியில் ஸர்வேசுவரன் மஹத்முதலாக மஹா பூதம் வரையிலும் சிருஷ்டிக்கிறான். †ஸத்வாரக சிருஷ்டியில் «வெயு)

* அத்வாரக சிருஷ்டியாவது தானேசெய்யும் சிருஷ்டி.

† ஸத்வாரக சிருஷ்டியாவது பிரம்மாதிகட்கு அந்தராத்மாவாயிருந்து செய்யும் சிருஷ்டி.

விரிஞ்சகிரிஶயோர்மத்யே ப்ரதமாவதார:" "மத்யே விரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:" என்றபடி பிர்ம்மருத்திரர்கட்கு இடையிலே விஷ்ணுரூபியாயவதரித்துக் காத்தற்றொழிலையும், ரஜோகுணமுடைய பிரம்மாவுக்கு அந்தராத்மாவாயிருந்து சிருஷ்டித் தொழிலையும் தமோகுணமுடைய ருத்திரனுக்கு அந்தராத்மாவாயிருந்து அழித்தற்றொழிலையுஞ் செய்கிறான். ஆதலால் ஸத்வகுணமுடைய முதற்கடவுளுக்கே முத்தொழிலும் உரிமையுடையதாயிருக்குமென்றறியத்தக்கது. இதனை, ¶ ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மிகாம் ஸஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:" "ஸ்ருஷ்டிஸ் தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணு சிவாத்மிகாம் ஸஸம்ஜ்ஞாம்யாதி பகவாநேகஏவ ஜநார்த்தந:" என்றப்ரமாணமும் வலியுறுத்தும்.

அவர் ஸத்வகுணமுடைய முதற்கடவுளின், நற்குணக்கடல்-கல்யாண குணங்களாகிய கடலில், ஆடுதல், மூழ்குதல், வழக்காடல், உரையாடல், என்ற வழக்கால் ஆடல் என்பதற்குச்சொல்லல் என்று பொருள் கொள்வதுபோல இங்கும் நற்குணக்கடலாடுதல் என்பதற்குக்கணக்கற்ற கல்யாண குணங்களைச்சொல்லுதல் எனப்பொருள்கொள்ளினும் பொருந்தும். நன்றரோ-உய்யும்வகையாமாதலால் சொல்லத்தொடங்கினேன், ஆத்மாவுக்கு ஈசுவர விஷயஜ்ஞானமுண்டாகி அவனது குணங்களை வழுத்தாதபோது அசித்துக்குச் சமமாக மதிக்கப்படுமாதலால் ஸத்தாதாரகமான அவனது குணங்களை வாழ்த்துதல் உஜ்ஜீவன ஹேதுவாமென்பார் "நற்குணக்கடலாடுதல் நன்றரோ" என்றார். அரோ-அசை. ஆதலால் சொல்லத் தொடங்கினேன் என்பது இசையெச்சம்.

முதற்பாட்டில் உரைக்கப்பட்ட முத்தொழிலுடையவனே ஸத்வகுணமுடைய முதற்கடவுளாவன். அரூபியாய் நீக்கமற நிறைந்துள்ள அவனது நன்னிலையை மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வாரே தெரிந்துணர்வதற்குரியவராவார். யான் அங்ஙனம்

¶ இதன் பொருளாவது- படைத்தல் காத்தல் அழித்தல் என்ற தொழில்களைச் செய்கிற பிரம்ம விஷ்ணு சிவன் என்ற பெயர்களை ஆறுகுணங்களையுடையவனும், ஒப்பற்றவனுமாகிய ஜனார்த்தனனே அடைகிறான் என்பதாம்.

ஸ்ரீ:

பகவந்மாயை.

பிர்ம்மாமுதல் எறும்பீறாகவுள்ள எல்லா ஜீவர்களும் பகவந்மாயையிற் கட்டுண்டு அலமருகின்றார்கள். இளமை, யாக்கை, செலவும், வாழ்நாள் என்ற இவை முதலியவெல்லாம் அநித்யங்களாயிருக்க, இவையெல்லாம் நித்யங்களாம் என்ற புத்தியைப் பிறப்பிப்பதும் பகவந்மாயையே. ஸர்வேச்வரனுடைய அநுக்ரஹம் பெற்றவர்களே இந்தப் பகவந்மாயையைக் தாண்டிச் செல்கின்றார்கள் ஏனையோர் எத்துணைச் சிறப்புடையவர்களாயிருந்தாலும் அதனைக்கடந்து செல்வதற்கு வலியற்றவர்களாவார்கள். இதுபற்றியே கண்ணன் கீதையில்,

“𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾।
𑌮𑌾𑌮𑍇𑌵𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿𑌤𑍇॥
தைவீ ஹ்யேஷா குணமயீ மமமாயா துரத்யயா
மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே.

ஸத்வ ரஜஸ் தமஸ்ஸென்கிற முக்குணங்களின் விகாரமான இந்த எனது பிரகிருதியென்னும் மாயையானது என்னுடைய லீலைக்காக என்னாலே ஏற்படுத்தப்பட்டதாகையால் இதைக் கடப்பதற்கு ஒருவராலும் முடியாது. ஆனால் ஸத்யஸங்கல்பனாய், பெருங்கருணைத் தடங்கடலாய், எல்லாவுலகத்தையும் சிறிதும் பிரயோஜனங்கருதாது காக்கவல்லவனாகிய என்னையே எவர்கள் சரணமாகப் பற்றுவார்களோ அவர்களே இம்மாயையைக்கடந்து என்னை உபாஸிப்பார்கள். ஆனால் அப்படிப்பட்ட சரணாகதியை எல்லோரும் ஏன் அநுஷ்டிக்கிறதில்லையெனின்; ஜீவர்களில புண்ணியஞ் செய்தார் சிலர். பாபஞ் செய்தார் பலர். இவ்வாறு பாபஞ் செய்தவர்களுள் மூடர் சிலர். மாயையால் அழிந்த அதமர் சிலர். அசுரத்தன்மையடைந்தவர் சிலர் இந்த நால்வரும் என்னை யடையமாட்டார்கள்.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌜𑌨𑌾𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌆𑌰𑍍𑌤𑍋 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌚 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥

சதுர்விதா பஜந்தேமாம் ஜநாஸ்ஸுக்ருதிநோர்ஜுந
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தி ஜ்ஞாநீச பரதர்ஷப.

புண்ணியஞ் செய்தவர்களுள் (1) ஆர்த்தன், (2) ஜிஜ்ஞாஸு, (3) அர்த்தார்த்தி (4) ஞானி என்ற இந்நால்வருமே என்னைச் சரணமாக வடைந்து ஸேவிக்கிறார்கள். இவர்களுள் ஞானிதான் மிகச்சிறந்தவன் ஏனென்றால் என்னையே அடையவேண்டுமென்று என்னையே எப்பொழுதும் நாடியவனாய் இதர விஷயப்பற்றற்று என்னிடத்திலே பக்தியுடையவனாயிருப்பான். மற்றவர்கள் தமது இஷ்டம் கை கூடும் வரை என்னை நாடியிருந்து, பின் என்னைக் கைவிடுவார்கள். ஆகலால் இவர்களைக் காட்டிலும் ஞானி சிறந்தவனென்னத் தட்டில்லை. நான் ஞானிக்கு எப்பொழுதும் இனியனாயிருப்பேன். அந்த ஞானியும் எனக்கு இனியனாயிருப்பான். ஆக, இதுவரை கண்ணபிரான் அருளியதை ஆராய்வோமானால் பகவன்மாயை இறைவனையே தஞ்சமாக வடைந்தார்க்கன்றி ஏனையோர்களால் கடத்தற்கரிதாமென்பது பெறப்படும்.

இனி, பகவன்மாயையை வெல்லுதற்கரிதென்பதற்கு இங்கு ஓர் விருத்தாந்தம உரைக்கப்பெறும்.

அது வருமாறு:—

ஒரு காலத்தில் நாரத முனிவர் ஸ்ரீய:பதியாகிய எம்பெருமானை ஸேவிக்கும்பொழுது, தாம் பிர்ம்மரிஷியென்றும், தத்வஜ்ஞாநம் கைவந்தவரென்றும் செருக்குற்றுச் சில வார்த்தைகள் கூறி

(1) ஆர்த்தன்—இழந்துபோன செல்வத்தை மறுபடியுமடையவிரும்புகிறவன்.

(2) ஜிஜ்ஞாஸு—பிரகிருதிக்கு புறம்பான ஆத்மாவை யடையவிரும்புகிறவன்.

(3) அர்த்தார்த்தி—புதிதாகச் செல்வத்தையடைய விரும்புகிறவன்.

(4) ஞானி—ஆத்மா ஸர்வேசுவரனுக் கடிமையென்று அவனிடத்தில் மிக்க பக்தியுடையவனாய் அவனையே பெரும்பேறாக நினைத்திருக்கிறவன்.

னர். அப்பொழுது எம்பெருமான் தமது மாயை எவராலும் கடத்தற்கரிதென்பதைப் புலப்படுத்தவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, முனிவரை நோக்கி 'இங்கிருக்கிற இந்தத் தடாகத்தில் ஸ்நானஞ்செய்வீர்' என்று கட்டளையிட்டனர். உடனே நாரத முனிவர் தமது வீணையைக் கரையில் வைத்துவிட்டு அந்தத் தடாகத்தில் மூழ்கிய மாத்திரத்தில் யாவரும் காமுறத்தக்க அழகிய பெண்ணுருவமடைந்தனர். ஸர்வேசுவரன் இவரது வீணையைக் கைக்கொண்டு மறைந்தனர்.

பின்னர், தமது முன்னைய நிலைமையை மறந்த நாரதியென்னும் இப்பெண்ணைக்கண்ட ஓரரசன் தனது அரண்மனைக் கழைத்துச் சென்று அவளை மணந்துகொண்டு *பல புதல்வர்களைப் பெற்றான். இவ்வாறு நாரதியென்ற மாது சம்சாரக்கடலாழ்ந்து அலமந்து வருந்துவதை ஸர்வேசுவரன்கண்டு இவளது கவலையைநீக்கத் திருவுள்ளங்கொண்டு ஒரு கிழவடிவினராய் இம்முனிமாதின் அருகில்வந்து, ஒரு தடாகத்தைக்காட்டி அதில் முழுகி வரும்படி நியமித்தனர்.

அம்முனிமாதும் அங்ஙனமே செய்து முன்புள்ள முனிவடிவமடைந்து கரையேறினர். அப்பொழுது எம்பெருமான் தாம் முன்புகொண்டுசென்ற யாழைக்கொடுத்து 'நீர் செருக்குற்றதனால் இவ்வாறு செய்தோம்'என்று அருளிச்செய்து; அவரது மனத்தைத் தெளிவித்தார்.

இந்த வரலாற்றால் பகவந்மாயையை யாவருங் கடத்தற்கரிதாமென்பது நன்கறிவிக்கலாயிற்று.

---

*பிரபவ என்பதுமுதல் எண்ணப்படுகிற அறுபது வருஷங்களின் பெயர்களே நாரதர், நாரதியரகவிருந்து பெற்ற பிள்ளைகளின் பெயர்களாமென்பர்.

ஸ்ரீ:

அம்மைய நாயக்கனூர்

ஸ்ரீ நரசிங்கப் பெருமாள்.

திருமால் திருப்பதி நூற்றெட்டினுள் ஸ்ரீவைஷ்ணவ பாத்வம் நிலைநாட்டப்பட்டதாயும், திருப்பல்லாண்டின் அவதார ஸ்தலமுமான திருக்கூடல் தென்மதுரை என்று பெயர்பெற்ற, திவ்ய தேசத்தின் வடபக்கலிலும், "தென்கொள் திசைக்குத் திலகமாய் நின்ற திருமாலிருஞ்சோலை" "தாளதாமரைத் தடமணிவயல் திருமோகூர்" என்னும் இருதிவ்ய தேசங்களுக்கு வடமேற்கிலும், சிறுமலையின் சாரலில் நரசிங்கபுரம் என்ற ஓர் திவ்ய நகரமுளது. அது சாதாரணமாய் 'அம்மையநாயக்கனூர் என்றும்,ஐரோப்பியர்கள் அறியும் பொருட்டுக் 'கொடைக்கானல்ரோடு' என்றும் ரெயில்வே இலாக்காக்களில் சந்தையூர்—ஒருத்தட்டு கிராமமென்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இதில் ஸ்ரீகதலி நரசிங்கப்பெருமாள் ஸ்ரீ கமலவல்லித் தாயாருடன் வெகு காலமாகக் கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பது யாவருமறிந்ததே.இவ்வம்மைய நாயக்கனூர் ஜமீன்தாரவர்களே இந்தஸந்நிதிக்குப்பரம்பரைதர்ம கர்த்தர்களாக இருந்து வருகின்றார்கள்.

இந்த ஸந்நிதியில் பெருமாள் எழுந்தருளியிருக்கும், கர்ப்பகிரஹத்தில் ஓர் சிவலிங்கமும் காணப்படுகிறது, அதன் பீடத்தில் "வாசுதேவ மனனம்" என்ற வாசகம் சிலையில் வரையப்பட்டிருக்கின்றது. அதுகொண்டு இதனைச் சிவாலயமென்பார் சிலர். அவ்வாலய விஷயமாய் எமது சிற்றறிவிற்கு எட்டிய சில விஷயங்களை இவண் கூறுவாம்,

பழமையான சர்க்கார் சாஸனங்களில் ஊரின்பெயர் 'நரசிங்கபுரம்' எனக் காணப்படுவதால் பெருமாள் திருநாமத்தைப் பின்பற்றி ஊர் அப்பெயரை யடைந்ததெனக் கொள்ளுதல் பொருத்தமுடைத்தாம். நரசிங்கபுரமென்ற ஊர் முற்படத்தோன்றி நரசிங்கன் என்ற பெருமாள் பின்னர் வந்தார் என்பது பொருந்தாது. பெருமாள்

திருநாமம்கொண்ட ஊரானபடியால் ஊர் தோன்றுவதற்கு முன்பே பெருமாள் ஆலய மிருந்திருத்தல்வேண்டும், அன்றியும் பாளையப்பட்டு ஏற்படுமுன்னரே பெருமாள் ஆலயம் இவ்வூரில் இருந்ததென்பதற்கு இந்த ஜமீனைச்சேர்ந்த பல கிராமங்களில் ஏற்பட்டிருக்கிற இனாம் நிலங்களின் பட்டாக்களில் ஸ்ரீகதலீநரசிங்கப்பெருமாள் கைங்கர்யம் என்று காணப்படுவதும் போதுமான ஆதாரமாகும். ஆக, இந்த ஜமீன் ஜாதியில் இந்த ஜமீன்தாரவர்களின் பரம்பரை வருவதற்கு முன்பே இது விஷ்ணு ஆலயமாக இருந்து பின்னர் அப்பரம்பரையில் வந்தவர்களில் சைவ அபிமானம் கொண்ட சிலரால் தெய்வ சமரஸபாவம்கொண்டு லிங்கப்பிரதிஷ்டையும் செய்யப்பட்டு அன்னவர் காலத்திலே இக்கோயிலைச்சேர்ந்த தெப்பக்குளமும் வெட்டியிருத்தல் வேண்டுமென மயக்கமறத் தெரிகின்றது. நந்தி முதலிய சைவ சின்னங்கள் குளக்கரையில் காணப்படுகின்றமையால் எம் அபிப்பிராயத்திற்கும் ஒத்திருக்கின்றது. அன்றி இதனை ஆராய்ச்சி முறையில் அறிவதற்கு வேறு போதுமான ஆதாரங்கள் புலப்படவில்லை. மற்றப்படி பெருமாள் பிற்படவந்தவர் என்றுகூறவும் போதுமான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் நமக்குத் தென்படவில்லை.

கோயிலின் எல்லைக்குள் வில்வமரங்கள் தோன்றுவதுகொண்டு சிவாலயமென்று கூற இயலாது. விஷ்ணு ஆலயங்களில் வில்வ விருக்ஷம் தோன்றுவதாலும் சிவாலயங்களில் திருத்துழாய்ச் செடிகள் தோன்றுவதாலும் ஆலய பேதங்கள் இருத்தல் கூடுமென நினைப்பது சரியல்ல. அகலகில்லேனிறையும், என்றிருக்கும் பிராட்டிக்கு இருப்பிடம் வில்வவிருக்ஷமாகையாலும், அன்னவளுக்கே பில்வலாயை என்று திருநாமமுளதாலும் விஷ்ணு ஆலயத்திற்கும் வில்வ விருக்ஷங்கள் உரியன என்பது செவ்வனே வெளியாகும் நிற்க,

இச்சந்நிதியின் ஈசானத்தில் 'பைரவர்' கோயிலிருப்பதுபற்றி இது சிவாலயமாக இருந்திருத்தல் வேண்டுமென்றால், அதற்குமுன் கூறிய காரணங்களை மறுக்கப்போதுமானதாகும். ஆக மேற்கூறிப் போந்தவாற்றால் இவ்வூர் ஆலயம் ஊர்தோன்று முன்னரே விஷ்ணு ஆலயமாக இருந்துவந்ததென்பதுவும் தெளிவாம்.

பிராகாரத்தின் சுவர்க்கற்களின் இடையிடையே சிலசிலாசாஸனங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அக்கற்களை உள்ளும் புறமுமாக மாற்றிவைத்துச்சுவரெடுத்திருப்பதால் அவைகளை இன்னதென அறிவதற்கு இடமில்லை. ஜமீன், நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்தமையாலும், அன்னவர் குடிப்பிறப்பில் வைஷ்ணவர்களாகையாலும், அவர்களின் அதிகாரத்தில்வந்த இவ்வாலயம் ஆதியில் திருமாலாலயமாகவே தோன்றியிருக்கவேண்டுமென்பது திண்ணம். அன்றியும், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களுள் இவ்வூர் முல்லை நிலமாகையால் திருமால் திருப்பதியாகவே யிருந்திருத்தல் வேண்டும்.

இத்திருப்பதியில் எழுந்தருளியிருந்த உத்ஸவ விக்ரஹங்கள் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு களவுபோயின. அதுமுதல் மூலவரையும் தனிக்கோயில் தாயாரையும் கொண்டு ஸந்நிதி காரியாதிகள் நடத்தப்பட்டுவந்தன. ஜமீனில் அமர்ந்திருந்த அதிகார அங்கத்தினர்கள் ஸ்ரீவைஷ்ணவபிராமணர்களாக இருந்தும் இதைக் கவனியாமல் சுயநலம் கருதிச்சென்றனர். சமீபத்தில் திண்டுக்கல் வக்கீல் ஸ்ரீமாந் K. S. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அவர்கள் இந்த ஜமீன் அதிகாரத்தில் அடிஷனல் ரிஸீவராக நியமிக்கப்பட்டனர். வேலைக்கு வந்ததும் "உனக்கேநாமாட்செய்வோம்" என்று பெருமாள் ஸந்நிதி கைங்கர்யமே முதற்பணிவிடையாகக்கொண்டு களவுபோன விக்ரஹங்களுக்குப் பதில் பிம்பங்கள் வார்க்கச்செய்து, ஸந்நிதிக்குள் சிற்சில ரிப்பேர்களும் செய்தமேதாடு முன்வாசல் மண்டபமும் நிர்மாணம்செய்து சென்ற விபவஞு ஐப்பசிமீ 8உயில் கும்பாபிஷேகமும் நடந்தேறும்படி செய்வித்தார். இதற்கு ஜமீன்தாரான ஸ்ரீமாந் K. இராமஸாமி நாயக்கரவர்களும அய்யங்காரவர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்கிவேண்டிய பொருளுதவியும் பிறவுதவியும் செய்து தம் காலத்தில் களவுபோன விக்ரஹங்களுக்குப் பதில் கொண்டு பிரதிஷ்டை செய்துவைத்த பெருமையையும் அடையலானர்.

இந்த மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய ஸ்ரீஜகத்குரு சங்காராசார்ய ஸ்வாமியவர்கள் புதல்வனுக்

கொங்கும் அன்னைபோல அன்புமிகுத்து அருநெறிகடந்து இந்நகர்க்கு விஜயம்செய்து பத்துநாளிரவு பரிவார பரிஜனங்களுடனிருந்து இப்பெருமாள் பிரதிஷ்டையை முடித்துவைத்துச்சென்றது மிகவும் பாராட்டத்தகுந்தது. அன்னவர் விஜயமில்லாதிருப்பின் இப்பிரதிஷ்டையும் நிகழ்ந்திராது.

புது ஆலயங்கள் கட்டி பிரதிஷ்டை செய்யவேண்டுமென நோக்கம்கொண்டு நாட்டில் பல மனிதர்கள் அலைகின்றனர். முன்னமேயிருந்து ஜீர்ண தசையடைந்திருக்கும் திருக்கோயில்களைப் புதுப்பித்துச் சரியான நிலைக்குக் கொண்டுவரச்செய்வதே பெரிய தருமமென்று அவர்களுக்கு யாவரும் எடுத்துரைக்கவேண்டுமென்பது எமது அபிப்பிராயம், இப்பெருமாள் பிரதிஷ்டைக்குக் காரண பூதரான ஸ்ரீமாந் K. S. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியின் நன்னோக்கத்தையும் நன்முயற்சியையும் மற்றைத் தேவாலய அதிகாரிகளும் பிறரும் பின்பற்றி இக்கோயிலை இன்னும் சிறப்பான நிலைக்குக் கொண்டுவந்து வைஷ்ணவத்திரு இந்நாட்டில் குடிகொள்ளும்படி செய்வாரென எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்,
பெரியநம்பி,
R. சுந்தரராஜய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ நிராதார
பாகவத சரமகைங்கர்ய சங்கம்.

அநுதாபத்தோடு, உதார தருமகுணகணங்கள் நிறைந்து அநுஷ்டான பரியந்தம் கைவந்த ஸ்ரீவைஷ்ணவ மஹாநுபாவர்களுக்கு ஓர் பணிவுள்ள முறைப்பாடு:—

ஸ்ரீவைஷ்ணவ சமயச் சார்பினரான பாகவதர் அநேகர் ஏழைகளாயும் ஆதரவில்லாதவர்களாயும் இருப்பது சகலருக்கும் தெரிந்த விஷயமே.

அவர்களில் சிலர்மிகப்பரிதாபகரமானஸ்திதியில்இருப்பதுமன்றி இவர்கள் ஆசார்யன் திருவடிகளை அடைந்துவிட்டால் இவர் தமக்கு ஸ்ரீசூர்ண பரிபாலனம்செய்வதற்கும் இவர் தப்குடும்பத்தினர் சக்தி யற்றவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் அப்பரிபாலன விதியைச் செய்யாது விடுகின்றனர். இது வருந்தத்தக்கதொன்றே.

இங்ஙனமிருப்பவர்களுடைய சரமகைங்கர்யங்களைச் செய் விக்க உதவியாவது அல்லது நடப்பிக்கவாவது மேற்குறித்த பெய ரையுடைய சங்கமானது 1928-ம்வருஷ ஜனவரிமீ ஆரம்பிக்கப்பட் டது. இச்சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் மாதம் ஒன் றுக்கு ஒருஅணா கொடுக்கவேண்டுமென்று அப்போது ஏற்பட்டது இதுமிகக் குறைந்த தொகையே.

இந்தக் குறைந்த தொகைகளை மாதந்தோறும் வசூல் செய்வதி னால் நல்ல அனுகூலமான கைம்முதல் தேறுமென்று யோசித்து இச்சங்கத்தின் உட்பிரிவான காரிய நிர்வாக சபையின் அங்கத்தினர் கள் மாத்திரம் உத்தமமான நன்கொடை கொடுத்து உதவிய தொகைகளின் மொத்தம் சேர்ந்து ரூபா 170 மூலதனமாக விர்த்தி செய்து சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொரு சபையும் விர்த்தியடையவேண்டுமேல் பொருள்வேண்டும் "பொருளில் லார்க்கிவ்வுலகமில்லை" என்ற நீதிமறையானு மறியலாம்.

இத்தகைய உதவி ஏழைப் பாகவதர்களுக்குச் செய்தல் "தீன பந்துவான"பகவான் உவப்புக்குப்பாத்திரமானதால் இந்தவிண்ணப் பத்தைக் கண்ணுறும் மஹாநுபாவர்கள் ஷெ சங்கத்தின் மூலதன விர்த்திக்காக யதாசக்தி கிஞ்சித்கரிப்பார்கள் என்று மிகவும் பணி வுடன் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

நிர்வாக சபையின் அங்கத்தினர்கள்.

12. பள்ளியப்பன் தெரு சௌகார்பேட்டை, மதறாஸ்.